மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண். 284 /2009

வாக்குமூலம்: வா.சா.1 – <u>குப்புசாமி</u>

<u>14.02.2025:</u> சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தற்சமயம் வாகரையில் குடியிருந்து வருகிறேன். எத்தனை ஆண்டுகளாக மேற்படி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் 5 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு எங்கு குடியிருந்தேன் என்றால் தொப்பம்பட்டியில் குடியிருந்தேன். தொப்பம்பட்டியில் குடியிருந்த வீட்டின் கதவு எண் என்ன என்றால் நினைவில்லை. மேற்படி தொப்பம்பட்டியில் எத்தனை ஆண்டுகள் குடியிருந்தேன் என்றால் 10 ஆண்டுகள் குடியிருந்தேன். நான் வாகரையிலும், தொப்பம்பட்டியிலும் குடியிருந்த போது மேற்படி ஊர்களில் வாடகை வீட்டு முகவரியில் குடும்ப அட்டை இருந்ததா என்றால் தொப்பம்பட்டியில் குடியிருந்த போது அந்த வீட்டு முகவரியில் குடும்ப அட்டை இருந்தது. வாகரையில் இல்லை.

2) அதே போல் வாக்களாளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை ஆகியவை தொப்பம்பட்டி முகவரியில் இருந்தது என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்குச் சொத்தில் எனக்குரிய பாகத்தைக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எவ்வளவு பங்கு உள்ளது என்றால் அளந்து பார்த்தால் தான் சொல்ல முடியும். வழக்குச் சொத்தை சிவசாமி என்ற சின்னச்சாமி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அவர் 20 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறாரா என்றால் வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் அவர் தான் அனுபவித்து வருகிறார். வழக்குச் சொத்தை நான் நேரடியாக சென்று பார்த்ததில்லை என்றால் பார்க்கவில்லை, சென்றால் அனுமதிக்கமாட்டார்கள்.

3) நான் சொல்வது போல் 2 ஆம் பிரதிவாதி என்னை வழக்குச் சொத்தில் அனுமதிக்கமாட்டார் என்பது பொய் என்றாலும், நான் வழக்குச் சொத்தை எந்த காலத்திலும் நேரில் பார்க்கவோ, அனுபவிக்கவோ இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கு திருநெல்வேலியில் உறவினர்கள் உள்ளார்களா என்றால் இல்லை. நண்பர்கள் உள்ளார்களா என்றால் இல்லை.

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

ஓம்/- S.கபாலீஸ்வரன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி